1992 ஏப்ரல் 8]

மென்று எண்ணுகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலதகில் ஒரு இடத்தில் இருப்பதை இனனொரு இடத்திற்கு மாற்றவேண்டாம் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதில் கொள்வார்களா என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் இருக்கின்ற பேருந்து நிலையத்தை எக்காரணத்தைக் கொண்டும் இந்த அரசு மாற்றாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக வளர்ந்து வருகின்ற நிலைமைக்கு ஏற்ப பாளையங் கோட்டை வேந்தன்குளம் என்ற இடத்தில் புதியதாக ஒரு பேருந்து நிலையம் அமைப்பது பற்றிதான் அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 508, டாக்டர் ஜி.ஆர். மாலா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

508—

தானாகவே முன்வந்து பணி ஒய்வு பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு.

*2468 டாக்டர் ஜி.ஆர். மாலா :

மாண்புமிகுதொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாநில அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது இறந்து போனால் அவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளிப் பதைப் போல், தானாகவே முன வந்து பணி ஒய்வு பெறும் Voluntary retirement) அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு ஊழியர்கள் பணியிலிருக் கும்போது இறந்து போனால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதைப் போல் தானாகவே முன் வந்து பணி ஒய்வு பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பல்வேறு காரணங் களால் வாலண்டரி ரிடையர்மெண்ட் பெறுகிறார்கள். என்ன காரணம் என்பதை அறிந்து உடல் நலம் பாதிக்கப்படுவதால் காரணமாக Ischaemic Heart Disease, Cancer, Renal problem

[1992 ஏப்ரல் 8

Psychosis' போன்ற நோய்களினால் மேற்கொண்டு பணியைத் தொடர முடியாத நிலையில் தானாகவே முன்வந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பில் சிறப்பு சலுகை வழங்குவதை நமது அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ள கருணை அடிப்படையில் பணி நியமனத் திட்டத்தின் கீழ் பணியிலிருக்கும்போது மரணமடைந்து குடும்பத்தை நிராதரவாக விட்டுச் செல்லும் அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களாக கருதப்படும் மனைவி (அல்லது) கணவன், மகன், திருமணமாகாத மகள் ஆகியோர்களுக்கு அவரவர்களின் கல்வித் தகுதிக்கேற்றவாறு வாரிசு உரிமை அடிப்படையில் பணியளிக்கப்படுகிறது. இச்சலுகை, இயலாமை காரணமாக மருத்துவச் சான்றின் பேரில் 50 வயதிற்கு முன் ஓய்வளிக்கப்படும் அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

டாக்டர் ஜி. ஆர். மாலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலண்டரி ரிடையர்மெண்ட் பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு புதிதாக தொழில் தொடங்க அரசு கடன் உதவி வழங்குவதில் முன்னுரிமை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்களுக்கு உரிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து கடன் கேட்டு அவர்கள் மனு செய்தால் நிச்சயமாக அவர்களுடைய மனு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பணியில் இருக்கின்றபோதே இறந்தால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். கோயம்புத்தூரில் மாநில அரசு ஊழியர்களாக பணியில் இருந்து இறந்தவர்கள் இரண்டு மூன்று பேர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை வேண்டுமென்று நானும் கடிதம் கொடுத்து இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியிடங்களில் ஏற்படுகிற காலியிடங் களைப் பொறுத்து, முன்னுரிமை அடிப்படையில் வாரிசுதாரர் களுக்கு வேலை வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனிவெங் கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக் கும் வகையில் அரசு ஊழியர்களின் ரிடையர்மெண்ட் ஏஜை 58-லிருந்து 55-ஆகக் குறைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்பு சாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலண்டரி ரிடையர்மெண்ட் ஆகிறவர் களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுக்கும்போது, அவர் களுக்கு வழங்கப் பட்டு வரும் பென்சன் கொடுக்கப் படுமா அல்லது வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுத்தவுடன் அந்தப் பென்சன் நிறுத்தப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலண்டரி ரிடையர்மெண்ட் கொடுப் பவர்கள் யாருக்கும் வாரிசு உரிமை அடிப்படையில் வேலை கொடுக்கப் படவில்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டத் தொழில் மையங்களை அணுகினால், வேலையில்லாதவர்களுக்கு கடன் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் பல முறை பல இளைஞர் களுக்கு, அவ்வாறாக கடன் வழங்கக் கடிதம் கொடுத்தும், இது வரையில் அவர்களுக்கு கடனே கொடுக்கவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு தனியான சுற் றறிக்கை அனுப்புவாரா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கிய சாமி. இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். இந்தக் கேள்வி, வாலண்டரி ரிடையர்மெண்ட் கொடுத்து இருப்பவர் களுடைய வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலை கொடுப்பது பற்றிய பிரச்சினை. அப்படிப்பட்டவர்களுக்கு வேறு ஏதாவது வாய்ப்புக் கொடுப்பீர்களா என்று கேள்வி கேட்டபோது அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்களில் கடன் தருகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் ஒரு துணைக் கேள்வி கேட்டார், அப்போது பதில் சொல்லியிருக்கிறார்.

வினா என். 509, திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பு அரிசி உற்பத்தித்திட்டம் செயல்படுத்துதல்.

509—

*2058 திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல் சாகுபடியை மட்டுமே நம்பியிருக்கும் கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளின் வாட்டம் போக்க மத்திய அரசு மானியத்துடன் செயல்படும் சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திலும் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே :

1991-92 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தினையும் மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப் படும் ''சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தில்'' சேர்க்கும்படி மத்திய அரசிடம் கேட்கப் பட்டது. மத்திய அரசு இத் திட்டத்தினை செயல்படுத்த 50,000 ஹெக்டேர் நிலத்திற்கு மேல் அரிசி சாகுபடியாகும் மாவட்டங்களையே சேர்த்துக் கொள்ள முடிவெடுத்திருப்பதாகவும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 43,903 ஹெக்டேர் நிலத்தில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டு வருவதாலும் இத் திட்டத்தினை கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்த சாத்தியக்கூறு இல்லை என தெரிவித்துள்ளது.